1978 மார்ச் 16]

திரு. ரா. உமாநாத் : நான் இதுபற்றி வெரிஃபை பண்ணின போது, போதிய நீர் கிடைக்காது என்று உங்களுக்கு சொல்லப் படுகின்ற தகவல், டிபார்ட்மென்ட் கொடுத்திருப்பது சுத்தமாக சரி இல்லை, இது அன்-எக்கனாமிக்காக இல்லை என்பது தான் மெயினாக சொன்னது. இப்படிப்பட்ட மானாவாரி பிரதேசங் களில் இப்படிப்பட்ட திட்டங்களை கொண்டு வரும்போது, அது எக்னாமிக்-காக இருக்குமா அல்லது அன்-எக்னாமிக்காக இருக்குமா என்று பார்க்காமல் ஒட்டு மொத்தமாக நாட்டு நலனைக் கருதி, மக்களுடைய நலனைக் கருதி, நஷ்டமாக இருந்தாலும் இப்படிப் பட்ட திட்டங்களை மேற்கொள்வது தான் சரி. அந்த அடிப்படை யில் இதையும் மேற்கொள்ளவேண்டும் என்பது எனது வேண்டு கோள். அந்த அடிப்படையில் இது செய்யப்படுமா எனபது தான் எனது கேள்வி.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Availability of continuous minimum supply cannot be established during the earlier months of the irrigation season namely, August and September. எனவே நீர் பற்றாக் குறை என்பதும் உண்மை தான். மேலும் திட்டங்களை ஆய்வு செய்வதில் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரை டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு டன உணவு உற்பத்தி செய்வதற்கு 2,500 ரூபாய் வரை செலவு செய்யலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களை எடுத்துக் கொண்டால், தர்மபுரி, சேலம், கோயமுத்தூர் மாவட்டங்களுக்கு 3,500 ரூபாய் செலவு செய்யலாம் என்றும், இது தவிர மற்ற மாவட்டங்களுக்கு 3,000 ரூபாய் என்றும் அளவு வைககப்பட் டிருக்கிறது இந்த 'யார்ட்-ஸ்டிக்கை' வேண்டுமென்றால் மறு பரிசீலனை செய்யலாம்.

[முற்பகல் 9-20]

Supply of Power at Concessional Rates to Poultry Farms

*591 Q. THIRU R. E. CHANDRAN JEYAPAL: Will the Hon. the Minister for Public Works be pleased to state whereas poultry farms in other states enjoy the benefits of concessional tariff of 12 to 15 per cent per unit of electricity, the reason for charging the Tamil Nadu Poultry Farms at a higher tariff of about 70 paise per unit normally and about Rs. 1·50 per unit under power cut?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கோழிப் பண்ணையில் கோழிக் குஞ்சுகளுக்குத் தேவையான உடற் சூட்டிற்கு தனி மீட்டர் அமைத்து பயன்படுத்தும் மின் விளக்குகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 31 முதல் 34 காசு வரை மின் கட்டணம் விதிக்கப்படுகிறது. மின் உற்பத்தி விலையோடு ஒப்பிடும்போது இது சலுகைக் கட்டணமே ஆகும்.

[1978 மார்ச் 16

[முற்பகல் 9-20]

THIRU R. E. CHANDRAN JEYAPAL. Hon. Speaker, Poultry farmers produce meat and eggs for the table. Likewise agricultural farmers also produce food. So, poultry farmers also come under the Head 'Food Production' So, why not concessional tariff accorded to the agricultural farmers in regard to supply of electricity, be extended to the poultry farmers also?

THE HON. THIRU S. RAMACHANDRAN: The reason is very simple, Sir. The Electricity Board cannot afford.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, பிற மாநிலங்களிலே கோழிப் பண்ணைகளுக்கு அலகு ஒன்றுக்கு 12 முதல் 15 காசு வரை கட்டணம் செலுத்தப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் மட்டும் 31 முதல் 35 காசு வரை செலுத்துவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தமிழகத்தின் கோழி இறைச்சி ஏழைகளுக்கு கிடைக்காமல் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், கோழி இனப் பெருக்கத்தைக் கருதி, அலகு ஒன்றுக்கு விதிக்கின்ற இந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கான எண்ணம் இந்த அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கோழி விற்கின்ற விலைக்கும், அவர்கள் செலுத்துகின்ற கட்டணத்தையும் பார்க்கும்போது இது ஒன்றும் அவ்வளவு பெரியதாக இல்லை. அது சில காசுகள் தான் ஆகின்றன. ஆகவே, அத்தகைய உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. எம். ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் கோழிப் பண்ணைகளுக்கு வழங்குகின்ற மின்சாரத்திற்கு 12, 13 காசுகள் வசூலிக்கப்படுகின்றன. ஆனால் தமிழகத்தில் 33, 34 காசுகள் வசூலிப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், தமிழ் நாடு கோழி அபிவிருத்தி நிறுவனங்களைச் சார்ந்த நிலையங்களுக்கு நான்-டொமஸ்டிக் பர்பஸ் என்ற அடிப்படையில் 70 காசுகள் வசூலிக்கப்படுவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அத்தகைய கோழிப் பண்ணைகளுக்கு, கோழிப் பண்ணைக்கு மட்டும் தனியாக மீட்டர் வைத்துவிட்டால், இந்த 65 பைசா விகிதம் வராது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, கட்டுப்படியாகாது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். தொழிற்சாலைகளுக்கு மின்சார சப்ளை செய்கிறபோது, சாதாரண ஏழைக் குடும்பங்களுக்கு மின்சாரம் உபயோகிப்பதற்கு இருக்கக் கூடிய சார்ஜைவிட மிகவும் குறைவாகும். அப்படி தொழிற்

1978 மார்ச் 16]

சாலை முதலாளிகளுக்குச் சலுகைகள் கொடுக்கிறபோது, ஏன் இந்த கோழிப் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு அந்த மாதிரி கொடுக்கக்கூடாது. அதற்கு பதில் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது பெரிய தேசீயப் பொருளாதாரப் பிரச்னை.

திரு. கா. செங்கோடன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோழிப் பண்ணைக்கு யூனிட் ஒன்றுக்கு 31 காசுகள் விதிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் கோழிப் பண்ணை ஒன்றை எனது பெயரில் வைத்து, அதற்கு தனி மீட்டர் பொறுத்தி, 67 காசுகள் வீதம் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகச் செலுத்திக் கொண்டு வருகிறேன் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனி மீட்டர் இருக்குமானால் எல். டி. டாரிப்4(ஏ)-ன் படி சென்னையாக இருந்தால் 34 காசுகள், மற்றப் பகுதிகளுக்கு 31 காசுகள், தனி மீட்டர் இல்லையென்றால், மெட்ரோபாலிடன் பகுதியில் யூனிட் ஒன்றுக்கு $71\frac{1}{2}$ காசுகள்; மற்றப் பகுதிகளுக்கு $68\frac{1}{2}$ காசுகள். இது ஜெனரல் பர்பஸ் டாரிப் விகிதத்தில் வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக மீட்டர் வைத்து அதிகக் கட்டணம் செலுத்தி வருவதாகக் கூறுகிறார். அப்படி வசூலிப்பது உண்மையாக இருக்குமானால், உரிய விகிதாச்சார அடிப்படையில் பில் போடப்பட்டு, அவர் எவ்வளவு அதிகமாக செலுத்தியிருக்கிறார்களோ, அதை வருங்கால கரண்டு சார்ஜிலே ஈடு செய்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிய தகவலை மின்சார வாரியத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

திரு. என். வரதராஜன்: இந்த சாதாரண கோழிப்பண்ணைகளுக்கான மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து பெரிய அளவில் வைக்க இருக்கும் யானைப் பண்ணைகளுக்கு அதிகமாகக் கட்டணத்தை உயர்த்தும் முறையில் இப்போது இல்லாவிட்டாலும் அடுத்து வருகிற மின்சார பட்ஜட்டுக்குள் அரசு மறு பரிசீலனை செய்து கொண்டுவர முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: யானைப் பண்ணைகளைப் பற்றி நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இதிலே மத்திய சர்க்கார் முந்திக் கொண்டார்கள். யூனிட்டுக்கு 2 சூாக வீதம் உற்பத்தியில் மத்திய அரசு வரி போட்டதன் மூலமாக யூனிட் ஒன்றுகக $3\frac{1}{2}$ காசு வரை உயர்த்த வேண்டியிருக்கிறது. மேலும் உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்கனவே மின்சார வாரியத்திற்கு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.